## சுருக்கம்

மறுவாழ்வு – அயலகத் தமிழர் நலன் – தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு – புலம் பெயர்ந்த தமிழர்களின் நலனுக்காக கட்டணமில்லா தொலைபேசி வசதி, வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி (Mobile Application) தொடங்குதல் – நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பொது(மறுவாழ்வு.2)த் துறை

அரசாணை(நிலை)எண்.108 நாள்.08.02.2023.

சுபகிருது வருடம், தை–25

திருவள்ளுவர் ஆண்டு–2054

படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.842, நாள் 06–10–2021.
2. அயலகத் தமிழர் நலன் (ம) மறுவாழ்வுத் துறை ஆணையரின் கடித ந.க.எண். இ1/14465/2021, நாள்.24.12.2021, 14.11.2022, 29.12.2022 மற்றும் 03.01.2023.

*******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செய்தி வெளியீட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க அறிவித்த பல்வேறு நலத்திட்டங்களுள் கீழ்க்காணும் அறிவிப்பும் அடங்கும்.

**"புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு ஆலோசனை பெற வசதியாக கட்டணமில்லா தொலைபேசி வசதி, வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி (Mobile Application) அமைத்துத் தரப்படும்"**

2. மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கு செயல்வடிவம் கொடுக்கும் முகமாக மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் கீழ்க்கண்ட கருத்துருவினை தெரிவித்து நிர்வாக அனுமதியும் (ம) ரூ.84,93,440/– நிதி ஒப்பளிப்பும் செய்யுமாறு அரசினை கோரியுள்ளார்.

(i) 24/7 கட்டணமில்லா தொலைபேசி சேவை:

வெளிநாடுகளில் இனக்கலவரம், இராணுவப் புரட்சியினால் ஏற்படும் அசாதாரண சூழல், வேலை வழங்கும் நிறுவனம் / முதலாளியினால் ஏற்படும்

த.பி.பா..

பிரச்சனை போன்ற சமயங்களில் புலம் பெயர்ந்துள்ள தமிழர்கள் எளிதாகவும், விரைவாகவும் அரசை தொடர்பு கொண்டு ஆலோசனையும், உதவியும் பெற்று தாய்நாடு திரும்ப இச்சேவை உறுதுணையாக இருக்கும். வெளிநாட்டில் எதிர்பாராத விதமாகவும், உடல் நலக்குறைவாலும், விபத்தினாலும் இறக்கும் தமிழர்களின் உடலை தமிழ்நாட்டிற்கு கொண்டு வருவதற்கான முழுமையான வழிமுறைகளை இறந்தவரின் குடும்பம் உடனடியாக தெரிந்து கொள்ள இச்சேவை பெரிதும் உதவியாக இருக்கும்.

(ii) வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி (Mobile Application):

கல்வி (ம) வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள தமிழர்கள் தங்களின் முழு விவரங்களை (வெளிநாட்டில் பணிபுரியும் நிறுவனம் மற்றும் கல்வி நிலையம்) வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி (Mobile Application) வழியாக பதிவு செய்து கொள்ளலாம். இப்பதிவின் மூலம் புலம் பெயர்ந்துள்ள தமிழர்களின் எண்ணிக்கையை துல்லியமாகக் கணக்கிட்டு, இப்பொருளில் உரிய கொள்கைமுடிவுகள் மற்றும் புதிய திட்டங்கள் தொடங்க அரசுக்கு எளிதாக இருக்கும். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவிப்பில் வெளியிட்டுள்ளவாறு புலம்பெயர் தமிழர் குறித்த தரவு தளம் ஏற்படுத்திடவும், வெளிநாடு வாழ் தமிழர்கள் தங்களது விபத்து காப்பீடு மற்றும் ஆயுள் காப்பீடு போன்ற இனங்களை பதிவு செய்திடவும், புதுப்பித்திடவும் வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி (Mobile Application) உதவியாக இருக்கும். முறையான மற்றும் பாதுகாப்பான புலம் பெயர்வு தொடர்பான விழிப்புணர்வு குறும்படங்கள், வெளிநாட்டின் மொழி, கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், சட்ட திட்டங்கள், செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை (Do's & Dont's) பற்றிய வழிமுறைகள், புலம் பெயர் தமிழர்களுக்கான அரசின் நலத்திட்டங்கள், வெளிநாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் போன்றவற்றை ஒரே தளத்தில் அறிய வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி (Mobile Application) உதவிகரமாக இருக்கும்.

3. இத்திட்டங்களை செயல்படுத்திட ஏதுவாக, பின்வரும் பட்டியலின் வரிசை எண் 1 முதல் 8 வரை குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்கு ரூ.84,93,440/- நிதியை கீழ்க்கண்ட செலவினங்களுக்காக ஒதுக்கீடு செய்து தருமாறு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்கள் அரசைக் கோரியுள்ளார்:-

செலவினக் கூறுகள்:

| வ. எண் | செலவின விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | 24/7 கட்டணமில்லா தொலைபேசி<br>(i) தொடரா செலவினம்<br>அ) தொலைபேசி மையத்திற்கான அறை அமைத்தல்<br>2235 01 800 AH 31701 | 9,00,000 |

| | | |
|---|---|---|
| | ஆ) மையத்திற்கான அடிப்படை தொழில்நுட்ப வசதிகள் (கணினி, அச்சுப்பொறி, Server, தொலைபேசி, இணையதளம், U.P.S போன்றவை)<br>2235 01 800 **AH** 37601 | 8,00,000 |
| | இ) தொலைபேசி இணைப்புக் கட்டணம் (Line Cost)<br>2235 01 800 **AH** 30501 | 15, 000 |
| | ஈ) மேசை, நாற்காலி, குளிர்சாதனப் பெட்டி, மின்விசிறி மற்றும் இதர உபகரணங்கள்<br>2235 01 800 **AH** 30502 | 4,00,000 |
| | <u>(ii) தொடர் செலவினம்</u><br>அ) ஊதியம் (6 தொலைபேசி இயக்குபவர், 1 கண்காணிப்பாளர், 1 அலுவலக உதவியாளர்) {(6x15000x2) + (1x20000x2) + (1x10000x2)}<br>2235 01 800 **AH** 33302 | 2,40,000 |
| | ஆ) தொலைபேசி மாதாந்திர சேவை கட்டணம் (2x25000)<br>2235 01 800 **AH** 30501 | 50,000 |
| | **மொத்தம்** | 24,05,000 |
| 2. | **<u>வலைதளம்</u>**<br>அ)உருவாக்கம் மற்றும் பராமரிப்பு<br>ஆ)GST (18%)<br>2235 01 800 **AH** 37601 | <br>7,70,000<br>1,38,600 |
| | **மொத்தம்** | 9,08,600 |
| 3. | **<u>கைப்பேசி செயலி (Mobile Application)</u>**<br>அ) உருவாக்கம் மற்றும் பராமரிப்பு<br>ஆ)GST (18%)<br>2235 01 800 **AH** 37601 | <br>8,00,000<br>1,44,000 |
| | **மொத்தம்** | 9,44,000 |
| 4. | தரவுதளம் (விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவ காப்பீடு திட்டத்திற்கான தரவு) (Data Base)<br>GST (18%)<br>2235 01 800 **AH** 37601 | 8,10,000<br><br><br>1,45,800 |
| | **மொத்தம்** | 9,55,800 |
| 5. | கோவிட் 19 பரவல் காரணமாக வெளிநாடுகளிலிருந்து தமிழ்நாடு திரும்பியவர்கள் குறித்த தரவு GST (18%)<br>2235 01 800 **AH** 37601 | 7,28,000<br><br>1,31,040 |
| | **மொத்தம்** | 8,59,040 |
| 6. | வலைதளம் மற்றும் கைப்பேசி செயலிக்கு 5 வருடங்களுக்கான பராமரிப்பு<br>2235 01 800 **AH** 37601 | 10,00,000 |
| | **மொத்தம்** | 10,00,000 |

| | | |
|---|---|---|
| 7. | வன்பொருள் கொள்முதல் (Cloud server – ELCOT)<br>GST (18%)<br>2235 01 800 **AH** 37601 | 9,50,000<br><br>1,71,000 |
| | **மொத்தம்** | **11,21,000** |
| 8. | இதர செலவுகள்<br>2235 01 800 **AH** 30502 | 3,00,000 |
| | **கூடுதல் மொத்தம்** | **84,93,440** |

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 06.10.2021–ல் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க அயலகத் தமிழர் நலன் (ம) மறுவாழ்வுத் துறை ஆணையர் அவர்களின் மேற்காணும் கோரிக்கையை அரசு கவனமுடன் ஆய்வு செய்து அதனை ஏற்று, கட்டணமில்லா தொலைபேசி வசதி, வலைதளம் மற்றும் கைப்பேசி செயலி (Mobile application) ஆகிய திட்டங்களை செயல்படுத்துவதற்காக 24/7 கட்டணமில்லா தொலைபேசி திட்டத்தை நடைமுறைப்படுத்த தொடர் மற்றும் தொடரா செலவினம் மேற்கொள்ள ரூ.24,05,000/–ற்கு (ரூபாய் இருபத்தி நான்கு இலட்சத்து ஐந்தாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பும், மேலும் வலைதளம், கைப்பேசி செயலி, தரவுதளம், கோவிட்–19 பரவல் காரணமாக தாய்நாடு திரும்பியவர்கள் குறித்த தரவு, ஐந்து வருட பராமரிப்பு செலவு, வன்பொருள் கொள்முதல் மற்றும் இதர செலவினங்களுக்கான திட்ட மதிப்பீட்டுத் தொகையான ரூ.60,88,440/–ற்கு (ரூபாய் அறுபது இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நானூற்று நாற்பது மட்டும்) நிர்வாக அனுமதி மட்டும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி நான்கில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ்ப் பற்று வைக்கப்பட வேண்டும்.

2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் – 01 மறுவாழ்வு – 800 ஏனைய செலவு – மாநிலச் செலவினங்கள் – AH வெளிநாடுவாழ் தமிழர்கள் நலன்

305 அலுவலகச் செலவிகள் – 01 தொலைபேசிக் கட்டணங்கள் – ரூ.65,000/– (ரூ.50,000/– + ரூ.15,000/–)

(த.தொ.கு.2235 01 800 AH 30501)

305 அலுவலகச் செலவுகள் 05 அறைகலன் – ரூ.2,10,000/–

(த.தொ.கு.2235 01 800 AH 30505)

317 சிறு பணிகள் – 01 சிறு பணிகள் – ரூ.9,00,000/–

(த.தொ.கு.2235 01 800 AH 31701)

319 இயந்திரமும் சாதனமும் 01 வாங்குதல் – ரூ.1,90,000/–

(த.தொ.கு.2235 01 800 AH 31901)

376 கணினியும் துணைப் பாகங்களும் – 01 வாங்குதல் – ரூ.8,00,000/–

(த.தொ.கு.2235 01 800 AH 37601)

333 தொழில்முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம் – ரூ.2,40,000/–

(த.தொ.கு.2235 01 800 AH 33304)

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புது துணைப் பணி" (New Instrument of Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்(வ.செ.பொ.-I)துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வ.செ.பொ.-I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையரகம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்தை 2022-2023ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய விளக்கக் குறிப்பினை தவறாது உரிய நேரத்தில் நிதித்(பொது/வ.செ.பொ.-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆணையர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத் துறை ஆணையரகம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதி(பொது)த் துறையின் அ.சா.எண்.4087/நிதி(து.செ/ நிதி(பொது)/2022, நாள்.08.02.2023, ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. (இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.2423 (இரண்டாயிரத்து நானூற்று இருபத்து மூன்று). (IFHRMS ASL No.2023022423).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**டி.ஜகந்நாதன்**
**அரசுச் செயலாளர்**

<u>பெறுநர்</u>

ஆணையர்,
அயலக தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்
துறை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை-5.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-8.

<u>நகல்</u>

மாநில கணக்காயர், சென்னை-18.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர்-1, சென்னை-9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம்,
சென்னை-9.

த.பி.பா..

சிறப்பு நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை-9.
நிதி(பொது/வ.செ.பொ.I/II/வ.வ.I)த் துறை, சென்னை-9.
பொது(ம.வா.I/III)த் துறை, சென்னை-9.
பொது(அ.ந.மு.1)த் துறை, சென்னை-9.
பொது(பல்வகை)த் துறை, சென்னை-9.

இ.கோ/உ_திரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

ச. அன்புமணி
09/02/2023
பிரிவு அலுவலர்